[29th August 1970

Craft Teachers

*44. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether it is a fact that Craft Teachers of similar qualifications are given different scales of pay in High Schools and Higher Elementary Schools; and

(*b*) if so, the details thereof ?

கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பணியாற்றுகிற ஒரேவிதத் தகுதிகளையுடைய கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வேறுபட்ட சம்பள வீதங்கள் வழங்கப்படுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) உள்ளாட்சிமன்ற உயர்நிலைப்பள்ளிகளும் உதவிபெறும் உயர் நிலைப்பள்ளிகளும், ரூ. 90—4—110—3—140. உள்ளாட்சி மன்ற உயர்தர துவக்கப் பள்ளிகளும் உதவி பெறும் உயர்துவக்கப் பள்ளிகளும் : ரூ. 65—1—70—2—90 ; அரசினர்ப்பள்ளிகள் — முதல் நிலை : ரூ. 90—4—110—3—140; அரசினர்ப் பள்ளிகள்—இரண்டாம் நிலை: ரூ. 70—2—100.

Tiruchendur Panchayat Union School Teachers

*45. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that the salaries of teachers serving in schools in Tiruchendur Panchayat Union remain unpaid since November, 1969; and

(*b*) if so, the reasons therefor ?

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளங்கள் 1969 நவம்பர் முதல் கொடுக்கப்படாமலிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

29th August 1970]

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : (*a*) No.

(*b*) Does not arise.

*46. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the payment of salary to teachers of Tiruchendur Panchayat Union was delayed every year ; and

(*b*) if so, the reasons therefor ?

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்குரிய சம்பளம் ஒவ்வோர் ஆண்டும் தாமதமாகக் கொடுக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

THIRU K. S. ABDUL WAHAB : On a point of order, Sir. The question stands in the name of the hon. Member Thiru G. Swaminathan. The hon. Member is not present. Nobody is here to represent him.

MR. CHAIRMAN : Thiru Saw Ganesan put the question on behalf of the hon. Member Thiru G. Swaminathan.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி நிலை சரியாக இல்லாத காரணத்தால் இடையில் சில காலத் தாழ்வு ஏற்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடிக்கடி இப்படிக் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் அந்த ஊராட்சி ஒன்றிய நிதியில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு என்று ஒதுக்காமல், அந்தப் பணத்தை வேறு பணிகளுக்குச் செலவிடுவதுதான் என்பது உண்மையா ? ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் பள்ளி ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமோ, அதை முதலில் ஒதுக்கிவிட்டு, இதர பணிகளுக்கு ஏனைய நிதியை ஒதுக்குமாறு பொதுவான உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியம் கல்விக்கு என்று ஒதுக்குவதை அதற்கே செலவிட வேண்டுமே தவிர, வேறு துறைக்குச் செலவிடக் கூடாது என்பதை உள்ளாட்சித் துறை மூலமாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சொல்லப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றுக்குறை இந்த ஒன்றியத்தைப் பொறுத்த வரை பல காலமாக இருந்துவருகிறது. இதுபோன்ற நிலை ஏற்படாமலிருக்க வழி வகை கண்டு அதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கே இந்தச் சம்பளம் ஓரிரு மாதங்கள் தள்ளியே கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். 1-8-70-ல் ஏழாவது மாதம் வரையில் உள்ள சம்பளம் கொடுக்கப்பட்டுவிட்டது.